செ.வெ.எண்: 293/2016 நாள்: 23.05.2016

ந.க.எண்.ஒ5/103/2016

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நாகர்கோவில்
நாள்:23.05.2016

## பத்திரிக்கை செய்தி

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், ஆரல்வாய்மொழி வடக்கு வருவாய் கிராமத்திற்குட்பட்ட, ஆரல்வாய்மொழி பேரூராட்சிப் பகுதிக்கு மட்டும், அரசு மேல்நிலைப்பள்ளி ஆரல்வாய்மொழி, வடக்கூரில் வைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் சிறப்பு மனுநீதித்திட்ட (இரண்டாம் கட்டம்) நிறைவு நாள் நிகழ்ச்சி, 25.05.2016 (புதன்கிழமை) அன்று காலை 10.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

அரசு மேல்நிலைப்பள்ளி ஆரல்வாய்மொழி வடக்கூரில் வைத்து 17.02.2016 அன்று நடைபெற்ற மனுநீதித்திட்ட முதற்கட்ட நிகழ்ச்சியின் போது பெறப்பட்ட மனுக்களுக்கான உரிய பதில்கள் இந்த இரண்டாம் கட்ட நிறைவு நாள் நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களால் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படும். மேலும் இந்த நிகழ்ச்சியில் துறைவாரியாக அரசு நலத்திட்ட விவரங்களும் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படும்.

எனவே, ஆரல்வாய்மொழி பேரூராட்சிப் பகுதிக்குட்பட்ட பொதுமக்கள் அனைவரும் இந்த நல்ல வாய்ப்பினை பயன்படுத்தி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
தனித்துணை ஆட்சியர்(ச.பா.தி),
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.